# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-8 - மாயா வாமனனே
## (பிரிவால் மாயாதபடி தம்மை வைத்த விசித்திர சக்தியுடைய எம்பெருமானது விசித்திர விபூதியை அவன் காட்டக் கண்டு ஆழ்வார் ஆச்சரியப்படுதல்)

3414 * மாயா! வாமனனே! * மதுசூதா! நீ அருளாய் *
தீயாய் நீராய் நிலனாய் * விசும்பாய்க் காலாய் **
தாயாய் தந்தையாய் * மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் *
நீயாய் நீ நின்றவாறு * இவை என்ன நியாயங்களே! 1

3415 அங்கண் மலர்த் தண்துழாய் முடி * அச்சுதனே! அருளாய் *
திங்களும் ஞாயிறுமாய்ச் * செழும்பல் சுடராய் இருளாய் **
பொங்கு பொழி மழையாய்ப் * புகழாய்ப் பழியாய்ப் பின்னும் நீ *
வெங்கண் வெங்கூற்றமுமாய்[1] * இவை என்ன விசித்திரமே! 2

3416 சித்திரத்தேர் வலவா! * திருச்சக்கரத்தாய்! அருளாய் *
எத்தனையோருகமும் * அவையாய் அவற்றுள் இயலும் **
ஒத்த ஒண்பல் பொருள்கள் * உலப்பில்லனவாய் வியவாய் *
வித்தகத்தாய்[2] நிற்றி நீ * இவை என்ன விடமங்களே! 3

3417 கள்ளவிழ் தாமரைக்கண் * கண்ணனே! எனக்கொன்று அருளாய் *
உள்ளதும் இல்லதுமாய் * உலப்பில்லனவாய் வியவாய் **
வெள்ளத் தடங்கடலுள் * விடநாகணை மேல் மருவி *
உள்ளப் பல்யோகு செய்தி * இவை என்ன உபாயங்களே! 4

3418 பாசங்கள் நீக்கி என்னை * உனக்கே அறக் கொண்டிட்டு * நீ
வாச மலர்த் தண்துழாய் முடி * மாயவனே! அருளாய் **
காயமும் சீவனுமாய்க் * கழிவாய்ப் பிறப்பாய்ப் பின்னும் நீ *
மாயங்கள் செய்து வைத்தி * இவை என்ன மயக்குக்களே! 5

3419 மயக்கா! வாமனனே! * மதியாம் வண்ணம் ஒன்று அருளாய் *
அயர்ப்பாய்த் தேற்றமுமாய் * அழலாய்க் குளிராய் வியவாய் **
வியப்பாய் வென்றிகளாய் * வினையாய்ப் பயனாய்ப் பின்னும் நீ *
துயக்காய்[3] நீ நின்றவாறு * இவை என்ன துயரங்களே! 6

3420 துயரங்கள் செய்யும் கண்ணா! * சுடர் நீள்முடியாய்! அருளாய் *
துயரம் செய் மானங்களாய் * மதனாகி உகவைகளாய் **
துயரம் செய் காமங்களாய்த் * துலையாய் நிலையாய் நடையாய் *

---
[1] வெங்கூற்றமுமாம்
[2] வித்தகத்தால்
[3] துயக்கா

துயரங்கள் செய்து வைத்தி * இவை என்ன சுண்டாயங்களே! 7

3421 என்ன சுண்டாயங்களால் * நின்றிட்டாய்? என்னை ஆளும் கண்ணா![4] *
இன்னதோர் தன்மையை என்று உன்னை * யாவர்க்கும் தேற்றரியை **
முன்னிய மூவுலகும் * அவையாய் அவற்றைப் படைத்து *
பின்னும் உள்ளாய்! புறத்தாய்! * இவை என்ன இயற்கைகளே! 8

3422 என்ன இயற்கைகளால் * எங்ஙனே நின்றிட்டாய்? என் கண்ணா![5] *
துன்னு கரசரணம் முதலாக * எல்லா உறுப்பும் **
உன்னு சுவையொளி * ஊறொலி நாற்றம் முற்றும் நீயே *
உன்னை உணர உறில் * உலப்பில்லை நுணுக்கங்களே 9

3423 இல்லை நுணுக்கங்களே * இதனில் பிறிதென்னும் வண்ணம் *
தொல்லை நன்னூலில் சொன்ன * உருவும் அருவும் நீயே **
அல்லித் துழாய் அலங்கல் * அணிமார்ப! என் அச்சுதனே! *
வல்லதோர் வண்ணம் சொன்னால் * அதுவே உனக்காம் வண்ணமே 10

3424 * ஆம்வண்ணம் இன்னதொன்றென்று * அறிவதரிய அரியை *
ஆம்வண்ணத்தால் * குருகூர்ச் சடகோபன் அறிந்துரைத்த **
ஆம்வண்ண ஒண்தமிழ்கள் * இவை ஆயிரத்துள் இப்பத்தும் *
ஆம்வண்ணத்தால் உரைப்பார் * அமைந்தார் தமக்கு என்றைக்குமே 11

**அடிவரவு:** மாயா அங்கண் சித்திர கள்ளவிழ் பாச மயக்கா துயரம்
என்ன என்னவியற்கை இல்லை ஆம் என்றை

[4] என்ன சுண்டாயங்களால் எங்ஙனே நின்றிட்டாய் என் கண்ணா
[5] என்ன இயற்கைகளால் நின்றிட்டாய் என்னை ஆளும் கண்ணா